



வேளச்சேரி மேற்கு பகுதி 177வது வார்டுக்குட்பட்ட காந்தி சாலை, நடராஜன் தெரு, நியூ காலனி, பாரதியார் தெரு, பேபிநகர் ஆகிய தெருக்களில் புதியதாக மழைநீர் வடிகால் அமைக்கும் பணியினை ரூபாய் ஒரு கோடியே எழுபத்தைந்து இலட்சம் செலவில், கழக மாநில தேர்தல் பணிக்குழு செயலாளரும், பெருநகர சென்னை மாநகராட்சி ஆளுங்கட்சி பொருளாளரும், வார்டு மாமன்ற உறுப்பினருமான வேளச்சேரி பெ.மணிமாறன், பொதுமக்கள் பயன்பாட்டிற்கு தொடக்கி வைத்தார். இந்நிகழ்வில் பத்மராஜன், கன்னியப்பன், பெலிக்ஸ், மாஸ்டர் மணி, உதவி செயற்பொறியாளர், மாநகராட்சி ஊழியர்கள் பங்கேற்றனர்.

## கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம்

## அகஸ்தீஸ்வரம் தெற்கு ஒன்றியம், அகஸ்தீஸ்வரம் பேரூர்க் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், அகஸ்தீஸ்வரம் தெற்கு ஒன்றியச் செயலாளர் பா.பாபு அவர்கள், அகஸ்தீஸ்வரம் பேரூர்க் கழகச் செயலாளர் பொறுப்பிலிருந்து விடுவித்துக் கொண்டதால், **திரு. டி.விஜய கங்காதரன்** ( 15/39, புஜைப்பரைவிளை, அகஸ்தீஸ்வரம் அஞ்சல், கன்னியாகுமரி மாவட்டம்) அவர்கள் அகஸ்தீஸ்வரம் பேரூர்க் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட பேரூர்க் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 16-08-2025.

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்
தி.மு.க.

## ஒழுங்கு நடவடிக்கை ரத்து!

### தலைமைக் கழக அறிவிப்பு

திருநெல்வேலி மத்திய மாவட்டம், மானூர் கிழக்கு ஒன்றியம், அலங்காரப்பேரி எஸ்.சங்கர், அலவந்தான்குளம் ஒய்.இன்பராஜ் ஆகியோர் தங்களது செயலுக்கு வருத்தம் தெரிவித்து மீண்டும் கழகப் பணியாற்றிட அனுமதி அளிக்குமாறு, கழகத் தலைவர் அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர்கள் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 16-08-2025.

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்
தி.மு.க.

### எதிரிகளின் விமர்சனத்தைப் புறந்தள்ளி, மக்கள் நலனையே குறிக்கோளாக கொண்டு செயல்படுகிறார் முதல்வர்!

## சாமானிய மக்களின் ஆதரவு நாள்தோறும் பெருகி வருகிறது என்பதே நிதர்சனம்!

### "தினகரன்" நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

**சென்னை, ஆக. 17-**

**"அரசியல் எதிரிகளின் விமர்சனத்தைப் புறந்தள்ளி மக்களின் நலன் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு திறம்படச் செயலாற்றி வரும் தமிழக முதல்வருக்கு சாமானிய மக்களின் ஆதரவு நாள்தோறும் பெருகி வருகிறது" என "தினகரன்" நாளேடு தலையங்கத்தில் பாராட்டுத் தெரிவித்துள்ளது.**


தினகரன்
ஆகஸ்ட் 16, 2025 சனிக்கிழமை
பெருகும் ஆதரவு
நாட்டின் 79வது சுதந்திர தின விழாவில், சென்னையில் தேசிய கொடி ஏற்றி வைத்து, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் 9 முக்கிய அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார். நாட்டின் விடுதலைக்காக போராடிய தியாகிகளுக்கான ஓய்வூதியம் ரூ.22 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும். தியாகிகளுக்கான குடும்ப ஓய்வூதியம் ரூ.12 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும். வீரபாண்டிய கட்டபொம்மன் வழித்தோன்றல்கள், முன்னாள் ராமநாதபுரம் மன்னர் முத்துராமலிங்க விஜய ரகுநாத சேதுபதியின் வழித்தோன்றல்கள், சிவகங்கை மருது சகோதரர்களின் வழித்தோன்றல்கள் ஆகியோர் பெற்று வரக்கூடிய மாதாந்திர ஓய்வூதியம் ரூ.11 ஆயிரமாக உயர்த்தப்படும்.

நாட்டின் 79வது சுதந்திர தின விழாவில், சென்னையில் தேசிய கொடி ஏற்றி வைத்து, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் 9 முக்கிய அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார். நாட்டின் விடுதலைக்காக போராடிய தியாகிகளுக்கான ஓய்வூதியம் ரூ.22 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும், தியாகிகளுக்கான குடும்ப ஓய்வூதியம் ரூ.12 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும். வீரபாண்டிய கட்டபொம்மன் வழித்தோன்றல்கள், முன்னாள் ராமநாதபுரம் மன்னர் முத்து ராமலிங்க விஜய ரகுநாத சேதுபதியின் வழித்தோன்றல்கள், சிவகங்கை மருது சகோதரர்களின் வழித்தோன்றல்கள் ஆகியோர் பெற்று வரக்கூடிய மாதாந்திர ஓய்வூதியம் ரூ.11 ஆயிரமாக உயர்த்தப்படும்.

இரண்டாம் உலகப்போரில் பங்கேற்ற தமிழகத்தைச் சேர்ந்த முன்னாள் படை வீரர்களுக்கு வழங்கப்படும் ஆயுட்கால மாதாந்திர நிதி உதவி ரூ.15 ஆயிரமாக உயர்த்தப்படும். இரண்டாம் உலகப்போரில் பங்கேற்ற வீரர்களின் கைம்பெண்களுக்கு வழங்கப்படும் ஆயுட்கால மாதாந்திர நிதி உதவி ரூ.8 ஆயிரமாக உயர்த்தப்படும்.

முன்னாள் படை வீரர்களுக்கு தங்கும் விடுதிகள் ரூ.22 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும், தமிழகத்தில் மலைப் பகுதிகளில் கட்டணம் இல்லா விடியல் பயணத்திட்டம் மாற்றுத்திறனாளிகளுக்கும் விரிவாக்கம் செய்யப்படும். ஓட்டுநர் பயிற்சி பெற மாநில அளவில் பயிற்சி மையம், மண்டல அளவில் இரு பயிற்சி மையங்கள் மற்றும் மாவட்டத்துக்கு ஒரு ஓட்டுநர் பயிற்சி பள்ளி ஆகியவை தொடங்கப்படும்.

தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவுசெய்த தொழிலாளர்களின் குழந்தைகள் 10,000 பேருக்கு ரூ.15 கோடியில் இணைய வழியில் திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கப்படும். இப்படி, முத்தான ஒன்பது முக்கிய அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார்.

கடந்த இரு தினங்களுக்கு முன்பு தூய்மைப்பணியாளர்கள் மேம்பாட்டுக்கான 6 அறிவிப்புகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார். அதாவது, தூய்மைப்பணியாளர்களின் தொழில்சார் நோய்களை கண்டறியவும், சிகிச்சை அளிக்கவும் தனித்திட்டம், தூய்மைப் பணியாளர்கள் பணியின்போது உயிரிழந்தால், ரூ.10 லட்சம் இழப்பீடு, அவர்களின் குடும்பங்களுக்கு கூடுதலாக ரூ.5 லட்சம் காப்பீடு, தூய்மைப்பணியாளர்கள் சுயதொழில் தொடங்கும்போது அதிகபட்சமாக ரூ.3.50 லட்சம் மானியம், தூய்மைப்பணியாளர்களின் குழந்தைகளுக்காக புதிய உயர்கல்வி உதவித்தொகை திட்டம், நகர்ப்புறங்களில் சொந்த வீடு இல்லாத தூய்மைப் பணியாளர்களுக்கு 30 ஆயிரம் குடியிருப்புகள், நகர்ப்புற தூய்மைப்பணியாளர்களுக்கு காலை உணவு திட்டம் என அதிரடியாக 6 அறிவிப்புகளை வெளியிட்டார்.

இப்படி ஒவ்வொரு சமுதாய மக்களும் தங்களது வாழ்வில் மேம்பட நாள்தோறும் புதுப்புது அறிவிப்புகளை முதல்வர் வெளியிட்டு வருகிறார். இதுவே, மக்கள் நலன் காக்கும் `திராவிட மாடல்' அரசு என்பதை மீண்டும் நிரூபித்து காட்டியுள்ளார்.

ஒன்றிய அரசின் கொள்கை மிரட்டல் ஒருபுறம், நிதி மறுப்பு நடவடிக்கை இன்னொருபுறம் என அடுத்தடுத்து மிரட்டல்கள் வந்தாலும் அஞ்சாமல் நடைபோடுகிறார் தமிழக முதல்வர். தனது வலுவான நிதி மேலாண்மை மூலம் தமிழகத்தில் அனைத்து துறையையும் மேம்படுத்தி வருகிறார். சுமார் 10 ஆண்டுகளுக்கு பிறகு தமிழகத்தின் ஜி.டி.பி. வளர்ச்சியை இரட்டை இலக்கத்திற்கு உயர்த்தி பிடித்துள்ளார். அரசியல் எதிரிகளின் விமர்சனத்தை புறந்தள்ளி, மக்கள் நலன் ஒன்றையே குறிக்கோளாக கொண்டு திறம்பட செயலாற்றி வரும் தமிழக முதல்வருக்கு சாமானிய மக்களின் ஏகோபித்த ஆதரவு நாள்தோறும் பெருகி வருகிறது என்பதே நிதர்சனம்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## கே.ஏ. மதியழகன்

### ஆகஸ்ட் 17 (1983)



**தந்தை பெரியார், அறிஞர் அண்ணா ஆகியோர் வழிநடந்த தன்மான தளகர்த்தர். தலைவர் கலைஞர் அவர்களது உடன்பிறப்பு, நாற்பதாண்டு காலத்திற்கு மேலாக திராவிடர் நலம்நாடி உழைத்த பெருமகனார்.**

**இயக்கப் பணியிலும், அறப்போராட்டத்திலும் முன்னின்று செயலாற்றி மாணவர்களுக்கும், இளைஞர்களுக்கும் வழிகாட்டியாக விளங்கியவர்.**

**தமிழக அமைச்சராகவும், சட்டப்பேரவைத் தலைவராகவும் பணியாற்றியவர்.**

**"தமிழ் இனம் காக்க – மொழி காக்க தடந்தோள் உயர்த்திய தளபதி" என தலைவர் கலைஞர் அவர்கள் இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## அறிஞர் அண்ணா கண்டெடுத்த அறிவாயுதம்!

## மாமேதை மாறன் புகழ் வாழ்கவே!



**"அன்று எனது மடியில் ஆடிய மான்குட்டி!**
**அறிஞர் அண்ணா அவர்கள் பசத்தோடு தட்டிக் கொடுத்த, புலிக்குட்டி!**
**அறிவு, ஆற்றல் இவற்றில் எப்போதுமே படு சுட்டி!"**

என்றும்,

" அண்ணாவின் கண்களுக்கு ஆச்சரியக்குறியாகவும், உன் அன்பு மாமனாம் என் கண்களுக்கு அழகும், அறிவும் கலந்த மாமருந்தாகவும் விளங்கி, எந்த மருந்துக்கும், இரக்கம் காட்டி, இறங்கித் தொலையாத இறுதி முடிவிற்கு இயற்கை ஆளாக்கிவிட்டது உன்னை. எதை நினைத்து தேற்றிக்கொள்வேன் என்னை?"

எனத் தலைவர் கலைஞர் அவர்கள் இருவேறு சூழலில் பெருமிதமும், ஆறாத்துயரையும் பதிவிட்டு,

தலைவர் கலைஞரின் மனசாட்சியாய், இயக்கத்தின் முக்கிய மூளையாய்த் திகழ்ந்த மாமேதை முரசொலி மாறன் அவர்களின் 91 வது பிறந்தநாள் இந்த ஆகஸ்ட் 17.

1967 லே கழகம் இந்தியாவிலேயே காங்கிரஸை எதிர்த்து வெற்றி பெற்ற முதல் மாநிலக் கட்சியாக அறிவுலகமேதை அறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிபீடம் ஏறியபோது அவர் வெற்றி பெற்ற தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்த வேளையில், அந்த இடத்திற்கு பொறுத்தமானவர் என்று ஐயா மாறன் அவர்களை அண்ணா அடையாளம் காட்டியபோது, அதை மறுத்த தலைவர் கலைஞரிடம் " மாறன் என்றால், சாமானியமா? என் தம்பியன்றோ! என தென்சென்னை நாடாளுமன்ற வேட்பாளராக அறிவிக்கப்பட்டு, மூதறிஞர் இராஜாஜி, கண்ணியமிக்க காயிதே மில்லத் போன்ற பெரும் தலைவர்கள் முன்மொழிந்து, வழிமொழிய வெற்றி பெற்று, தனது 33 வது வயதில் இளம் பாராளுமன்ற உறுப்பினராக டெல்லி சென்று, தனது வாழ்நாள் இறுதி வரை, கழகத்திற்கும், கலைஞருக்கும் பக்கபலமாக, பாதுகாவல் அரணாகத் திகழ்ந்த மாமேதை மாறன் அவர்கள் பிறந்தநாள் இன்று.

திருக்குவளையில் ஆரம்பக்கல்வி பயின்று, குடந்தை, சேலம் கல்லூரிகளில் பாடம் பயின்று, தலைவர் கலைஞரின் விழியசைவில் வழியறிந்து, அறிவை வளர்த்து, வரலாறு, வாழ்க்கை வரலாறு, தமிழக வரலாறு, திராவிட இயக்க வரலாறு, பொருளாதாரம், தமிழ் இலக்கியம், ஆங்கில இலக்கியம், பன்னாட்டு புரட்சிகள், சமூகவியல், கம்பெனி சட்டங்கள், சினிமா, விளையாட்டு போன்ற இருபதிற்கும் மேற்பட்ட தலைப்பில் அமைந்த10000 புத்தகங்களை ஆழ்ந்துப்படித்து, கூர்ந்து நோக்கி, தீர்க்கமாய் தனது 24 வயதிலேயே "ஏன் வேண்டும்? இன்ப திராவிடம்" ஆராய்ச்சிப் பெட்டகத்தை அறிவுலகிற்கு அறிமுகம் செய்தவர் ஐயா மாறன் அவர்கள்.

**வெ.அன்புவாணன்**
கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர்



முரசொலி எனது முதல் குழந்தை என பூரித்த தலைவர் கலைஞர் அவர்கள் மாமேதை மாறன் அவர்களையும் முதற்பிள்ளையாகவே நெஞ்சில் ஏற்று, நிறைகுடமாய் மாறன் அவர்கள் திகழ நித்தம் அறிவுப் பசி போக்கி, அகில உலக கதைகள் சொல்லி, இயற்கை, வளமை, காதல், வீரம், பண்பாடு, போர்பரணி, புரட்சி, புறங்காணல் இவற்றை பள்ளி மாணவராக மாறன் அவர்கள் படித்திட்டபோதே கடிதங்கள் மூலம் சேலத்திலிருந்து சிறுவயதுதானே என்றெண்ணாமல், உலக நடப்புக்களை கடிதங்களாக எழுதி, அதைத்தொடர்ந்து கேள்விகளை தயாரித்து அனுப்பி அரசியல் பயிற்சி தந்தார்.

அப்போது இருவருக்கும் தெரிந்திருக்க வாய்ப்பில்லை இப்படித்தான் இந்நாட்டின் விடுதலைக்காய் பல காலம் சிறையில் வாடிய செல்லச்சீமான் பண்டித நேரு தன் செல்லமகள் இந்திராபிரியதரிசினிக்கு, பூமியின் தோற்றம், இயற்கை, கோள்கள், மன்னராட்சி, அதில் மாண்ட மக்களின் திடீர் புரட்சி, எழுச்சி, விடுதலை, இவற்றை கடிதங்கள் மூலம் செய்திகளாக தீட்டி, தனது மகள் அரசியல் அறிவில் சிறக்க அடித்தளமிட்டது என்று.

அவைதானே பின்னாளில் Discovery of India என்றும், Letters to Indra Priyadharisini என்றும் புத்தகமாய் தொகுக்கப்பட்டு பிரபலமடைந்தது.

செல்வக்குடியில் பிறந்த நேரு, உலக நாடுகளில் பயணம் செய்து, மேற்கத்திய வரலாறு அறிந்த நேரு, அயல்நாட்டு அறிவுசார் பல்கலைக்கழகங்களில் படித்திட்ட நேரு, நினைத்தபோதிலெல்லாம், ஓய்விற்காய் சுவிட்சர்லாந்து போன்ற கோடை வாசஸ்தளங்களுக்கு சுற்றுலா சென்ற பண்டித நேரு அவர்கள் சிறைச்சாலையில் சிந்தித்தது போன்றே, சிரமமிகு வாழ்வில் சிக்குண்டு தவித்தும் தனது சிந்தை நிறைந்த மருமகன் மாறன் அறிவிற்சிறக்க, சான்றோனெனப் போற்றப்பட பெற்ற தாயினும் முன்வந்து நெறிப்படுத்தினார்.

இயற்கையின் இரக்கமற்ற கொடுஞ்செயலால், பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் மறைவிற்குப் பின், அடுத்த முதலமைச்சர் யாரென்ற கேள்வி எழுந்தபோது, 90 சதவிகிதத்திற்கும் மேற்பட்ட கழக முன்னோடிகள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் தலைவர் கலைஞர் தான் அதற்கு பொறுத்தமானவர் என ஒருமித்த கருத்து ஏற்பட்டபோதும், தலைவரின் கோபாலபுரம் இல்லத்திற்கு சென்று மறைந்த புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். போன்றோர் வற்புறுத்தியபோது கலைஞரின் மனமறிந்து, பதவி சுமை தரும் ரணம் உணர்ந்து, " தயவுசெய்து மாமாவை முதலமைச்சர் பொறுப்பிற்கு வற்புறுத்தாதீர்கள்" என மறுத்து, தெளிவுர விளக்கி, தலைவர் கலைஞரின் மனசாட்சியாய் அன்றே திகழ்ந்தவர் மாமேதை மாறன் அவர்கள்.

இந்த வரலாற்று உண்மையை சென்னை ஆயிரம் விளக்கு பகுதியில் 1.4.1969 அன்று கே ஏ. கிருஷ்ணசாமி தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசிய புரட்சி நடிகர் எம். ஜி ஆர். பதிவு செய்து, முதலமைச்சர் பதவி என்பது கலைஞரின் மீது திணிக்கப்பட்டதேயன்றி, பதவியைத் தேடி கலைஞர் என்றும் வரவில்லை என்றும் பேசினார்.

இப்படித்தான் தனது இறுதி மூச்சு உள்ளவரை ஐயா மாறனின் சிந்தனை, செயல் அனைத்தும் தலைவர் கலைஞர் அவர்களைச் சார்ந்தே இருந்தது.

1979 ல் அவர் எழுதிய திராவிட இயக்க வரலாற்று புத்தகத்தின் என்னுரையில்,

" எனக்கு அகரம் சொல்லிக் கொடுத்து, என்னை ஆளாக்கிவிட்ட என் ஆசான் கலைஞர் அவர்களின் தூண்டுதலினாலேயே இவ் வரலாற்று நூலை எழுதத் தொடங்கினேன்." என்று குறிப்பிட்டுள்ளார்.

தேசிய ஜனநாயக முன்னணி ஒன்றிய அரசின் தொழிற்துறை அமைச்சராக பொறுப்பேற்று, திறம்பட பணியாற்றி, தோகாவில் நடைபெற்ற மாநாட்டில் இந்திய அரசின் சார்பில் பேசிட சென்ற ஐயா மாறன் அவர்கள் அங்கிருந்து தலைவர் கலைஞருக்கு எழுதிய கடிதத்தில்,,"நான் பிரதமர் ஐ. கே. குஜ்ரால் அவர்களிடம் இந்தியாவின் கொள்கையாக நான் எதைப் பேசுவது? என்று கேட்டபோது, நீங்கள் பேசுவதுதான் இந்தியாவின் தொழிற்கொள்கை. என கூறிட மறுநாள் மாநாட்டில் பேசுவதற்கு முன் ஆத்தாவையும், தாத்தாவையும் நெஞ்சில் நிறுத்திப் பேசினேன். பலத்த கைத்தட்டல் கிடைத்தது. பல்வேறு நாடுகளிலிருந்தும் மாநாட்டில் பங்குகொண்ட அமைச்சர்கள், பொருளாதார நிபுணர்கள் எனது உரையை வெகுவாகப் பாராட்டினார்கள். இந்தப் புகழுக்கெல்லாம் காரணம் நீங்கள் தானே! என்னயிருந்தாலும் நான் உங்கள் வார்ப்பல்லவா! நமது திருக்குவளை வாசமல்லவா! என்று நன்றியோடு குறிப்பிட்ட தலைவர் கலைஞரின் தலைமை மாணாக்கர் ஐயா முரசொலி மாறன் அவர்கள்.

பாராளுமன்றத்தில் பழமை வாதங்களையும், பாசிச நடவடிக்கைகளையும், தென் நாட்டின் உரிமைகளையும், மாநில சுயாட்சியையும், வலியுறுத்தி ஆணித்தரமான, வாதங்களை எழுப்பி, அவையின் நடவடிக்கையை தன்பக்கம் ஈர்த்து, மிகச்சிறந்த நாடாளுமன்றவாதியாகவும், பல உறுப்பினர்களுக்கு வழிகாட்டியாக, அரசியல் ஆசானாகவும் திகழ்ந்தவர் அறிவுலகமேதை முரசொலி மாறன் அவர்கள்.

அதனால்தான் அண்மையில் தனது நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் பொறுப்பின் இறுதி நாளில் நன்றி சொல்லி உரையாற்றிய மதிமுக பொதுச் செயலாளர் வைகோ அவர்கள்,

" என்னை நாடாளுமன்றத்திற்கு தேர்வுசெய்து அனுப்பிய தலைவர் கலைஞருக்கும், ஆசானாக திகழ்ந்த முரசொலி மாறன் அவர்களுக்கும் இந்நேரத்தில் நன்றி கூறுகிறேன் எனப்பதிவிட்டார்.

2001 ஜீன் 30 அன்று நள்ளிரவில் தலைவர் கலைஞர் அவர்கள் ஜெயலலிதாவின் வன்மம் மிகுந்த கொடுநெஞ்சின் கோரத்தாண்டவத்தால் கைது செய்யப்பட்டு வதைக்கப்பட்டதை அன்று, அங்கு முரசொலி மாறன் அவர்கள் இல்லாமல் போயிருந்தால் வெளியுலகம் அறிந்திராமல் போயிருக்கும். ஆளுநரும் மாற்றப்பட்டிருக்கமாட்டார் என்று தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றிற்கு பேட்டியளித்த நக்கீரன் ஆசிரியர் கோபால் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

இப்படி தனது வாழ்நாளில் தலைவர் கலைஞர் அவர்களுக்காகவே, வாழ்ந்து, அவரை நள்ளிரவில் காப்பாற்றத் துணிந்த தியாகத்தால் , பட்ட அடிகளால், ரணங்களால் பட்டமரமாய் நோயில் விழுந்து மறைந்த தியாகச் சீலர், கலைஞரின் இந்திரஜித்! கலைஞரின் அபிமன்யு! மாமேதை மாறன் அவர்களின் பிறந்தநாள் இன்று.

அவரது இந்த பிறந்தநாளில் சென்னை முரசொலி வளாகத்தில் அமைந்துள்ள அவரின் திருவுரு வச்சிலைக்கு மலையணித்து வணங்குகிறார் நமது திராவிடப் பேரரசர் தளபதியவர்கள்.

முரசொலியின் ஆசிரியர்களாய் திகழ்ந்திட்ட முரசொலி மாறன், முரசொலி செல்வம் போன்றோர் வடிவமைக்கப்பட்ட உலைகளமாம் முரசொலி வளாகத்தில் என்றும் மாறா புன்னகையோடு வரவேற்கும் ஐயா மாறன் அவர்களை வணங்கிட நாமும் செல்வோம் முரசொலிக்கு!

அனைவரும் சொல்வோம் ;

அறிஞர் அண்ணா அவர்கள் கண்டெடுத்த அறிவாயுதம்!

மாமேதை முரசொலி மாறன் அவர்களின் புகழ் வாழ்க! என்றே!